## தமிழ்நாடு – ஒன்றிய அரசுக்கு ஒருபோதும் அடிபணியாது!

# நாங்கள் ஒருமித்து எழுவோம்! இது டெல்லி அணிக்கு எதிரான ஓரணி!

**உலக மக்கள் தொகை நாளையொட்டி விடுத்த வலைதளப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!**

**சென்னை, ஜூலை 13-**

**உலக மக்கள் தொகை நாளையொட்டி விடுத்த சமூக வலைதளப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "தமிழ்நாடு உங்களுக்கு (ஒன்றிய அரசுக்கு) அடிபணியாது! நாங்கள் ஒருமித்து எழுவோம்! இது டெல்லி அணிக்கு எதிரான அணி!" என்று சூளுரைத்துள்ளார்.**

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

உலக மக்கள்தொகை நாளில், ஒன்றிய அரசுக்கு ஒரு நினைவூட்டல் :

- **தமிழ்நாடு மக்கள்தொகைக் கட்டுப்பாட்டில் முன்னணி வகிக்கிறது,**
- **பெண்களின் மாண்பைக் காத்து அவர்களுக்கான அதிகாரத்தை வழங்குகிறது.**
- **அனைவருக்கும் மருத்துவம் மற்றும் கல்வியை உறுதிசெய்கிறது.**
- **நீடித்து நிலைக்கத்தக்க வளர்ச்சியை முன்னெடுக்கிறது.**

ஆனால், பதிலுக்கு நமக்குக் கிடைப்பது என்ன?

குறைவான மக்களவைத் தொகுதிகள். குறைவான நிதி ஒதுக்கீடு. நாடாளுமன்றத்தில் இருந்து ஒதுக்கப்படும் நமது குரல்.



ஏன்? ஏனென்றால், தமிழ்நாடு சரியானதைச் செய்தது. அது தான் டெல்லியை அச்சுறுத்துகிறது.

இதைவிட மோசம் என்ன என்றால், பழனிசாமி அவர்களும் அவரது கட்சியும் தமிழ்நாட்டின் பக்கம் நிற்காமல், டெல்லிக்குத் துணைபோகிறார்கள். நாம் எட்டிய வளர்ச்சிக்காக நம்மைத் தண்டிக்கும் அநியாயமான தொகுதி மறுவரையறையை ஆதரிக்கிறார்கள்.

தெளிவாகச் சொல்கிறேன்: தமிழ்நாடு உங்களுக்கு அடிபணியாது. நாங்கள் ஒருமித்து எழுவோம்! இது டெல்லி அணிக்கு எதிரான ஓரணி!

நமது மண், மொழி, மானம் காக்க இணைவீர் ஓரணியில் தமிழ்நாடு!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## திருவண்ணாமலை - அரியலூர் - மதுரை மாவட்டங்களில்

# ரூ.64.43 கோடி மதிப்பில் - 7 விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – காணொலிக்காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஜூலை 13 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலை, அரியலூர், மதுரை மாவட்டங்களில் செயற்கை வளைகோல் பந்து மைதானம் அமைத்தல் மற்றும் புதுப்பித்தல் பணி, கரூர், மதுரை மாவட்டங்களில் நீச்சல் குளம் அமைக்கும் பணி, சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் புதிய விளையாட்டு விடுதி அமைக்கும் பணி என மொத்தம் 64.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் மாவட்ட விளையாட்டு மைதானங்கள், உள் விளையாட்டு அரங்கங்கள், நவீன உடற்பயிற்சி கூடங்கள், சட்டமன்ற தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள், விளையாட்டு விடுதி கட்டடங்கள் என பல்வேறு விளையாட்டு மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், மதுரை மாவட்டத்தில் 9.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை வளைகோல் பந்து மைதானம் புதுப்பிக்கும் பணிக்கும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 10.15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், அரியலூர் மாவட்டத்தில் 10.15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் புதிய செயற்கை வளைகோல் பந்து மைதானம் அமைக்கும் பணிகளுக்கும் காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து, இந்நிகழ்வில் மதுரை மாவட்டத்தில் 12.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைவிங் வசதியுடன் கூடிய நீச்சல் குளம் அமைக்கும் பணி, கரூர் மாவட்டத்தில் 6.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நீச்சல் குளம் அமைக்கும் பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 7.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய விளையாட்டு விடுதி, சேலம் மாவட்டத்தில் 7.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய விளையாட்டு விடுதி அமைக்கும் பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல்தியாகராஜன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# அலுவலர்களின் பயன்பாட்டிற்கு ரூ.17.65 கோடி மதிப்பில் 198 வாகனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 13 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 17 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 198 வாகனங்களை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முக்கிய நோக்கமாகும். அதன்படி, ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல், சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தி, உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள், உணவு கிடங்குகள் போன்றவற்றை ஏற்படுத்தி, புதிய ஊரக வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி அதனை திறம்பட செயல்படுத்தி, தமிழ்நாடு அரசு நாட்டிலேயே முன்னோடியாக விளங்கி வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படும் பணிகளின் தரத்தை கண்காணிக்கவும், உரிய காலத்தில் முடித்திடுவதை உறுதி செய்யவும, கள ஆய்வு மேற்கொள்ளவும் பணிகளை திறம்பட கண்காணிக்க ஏதுவாகவும், துறை அலுவலர்களுக்கு புதிய வாகனங்கள் வழங்கப்படும் என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 202526 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 17 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 198 வாகனங்களை கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செயற்பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள், உதவி செயற்பொறியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சேவையினை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் கொடியசைத்து தொடங்கி வைத்து, அலுவலர்களுக்கு வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக மொத்தம் 109 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 1018 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை ஆணையர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை நொளம்பூரில் பத்திரப் பதிவுத் துறை சார்பில்

# மாற்றுத் திறனாளிகளால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த சேவை மையம்!

## அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார்!



சென்னை, ஜூலை 13-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, பதிவுத்துறை, பொதுமக்களுக்கு அதிநவீன தொழில்நுட்பவசதிகளுடன் அனைத்து பதிவு சேவைகளையும் எளிதாக வழங்கி, அரசுக்கு வருவாய் ஈட்டித்தரும் முக்கிய துறையாக தொடர்ந்து செயல்பட்டுவருகிறது.

கடந்த 2024 - 2025 ஆம் நிதியாண்டில் தமிழகம் முழுவதும் 33, 60, 382 ஆவணங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அதில் சென்னை மண்டலத்தில் மட்டும் 3, 30, 565 பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிவுத்துறையின் சேவைகளை விரைவாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தபட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, நேற்று, சென்னை நொளம்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலகங்கள் வளாகத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, சுயஉதவி குழுவைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளால் நடத்தப்பட உள்ள "ஒருங்கிணைந்த சேவை மையம்" திறந்து வைக்கப்பட்டது.

இந்த சேவை மையத்தின் மூலம் பொதுமக்களுக்கு வில்லங்கச்சான்று விண்ணப்பித்தல் (Applying for EC) ஆவணத்தின் சான்றிட்ட நகல் விண்ணப்பித்தல் (Applying for CC) திருமண வடிப்பு விண்ணப்பித்தல் (Marriage Extract) வில்லை முன்பதிவு செய்ய விண்ணப்பித்தல் (Booking of Tokens) இணையவழி ஆவணம் உருவாக்குதல் (Online Registration) சங்க பதிவு விண்ணப்பித்தல் (Applying for Societies Registration) கூட்டாண்மை நிறுவன பதிவு விண்ணப்பித்தல் (Applying for Firms Registration) உள்ளிட்ட சேவைகள் குறைந்த கட்டணத்தில் வெளிப்படைத்தன்மையுடன் அளிக்கப்படும்.

இந்த பணிகளை மேற்கொள்ளும் சுயஉதவிகுழுவைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு நிலையான வருமான வாய்ப்பும் இதன் மூலம் கிடைக்கப்பெறும்.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம், க.கணபதி, வணிக வரி மற்றும் பதிவுத்துறை அரசுசெயலாளர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதிஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ்பொன்ராஜ் ஆலிவர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ரயில்வே கேட் கீப்பரின் அலட்சியமே

# கடலூர் ரயில் விபத்தில் 3 மாணவர்களின் உயிரிழப்புக்கு காரணம்!

## விசாரணையில் தகவல்!

கடலூர், ஜூலை 13-

கடந்த 8ஆம் தேதி கடலூர் செம்மங்குப்பம் ரயில்வே கேட்டில், தனியார் பள்ளி வாகனம் மீது ரயில் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து, கேட் கீப்பர் பங்கஜ் சர்மாவை காவல்துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த விபத்து குறித்து ரயில்வே ஊழியர்கள் 11 பேருக்கு சம்மன் அனுப்பப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட நிலையில், நேற்று மேலும் 2 ஊழியர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த நிலையில் செம்மங்குப்பம் ரயில்வே கேட்டை மூடிவிட்டதாக, ஆலப்பாக்கம் நிலைய அதிகாரியிடம் கேட் கீப்பர் பங்கஜ் சர்மா பொய் கூறியது காவல்துறை விசாரணையில் அம்பலமாகியுள்ளது. ரயில்வே கேட்டை மூடாமல், அதை மூடி விட்டதாக ஆலப்பாக்கம் ரயில் நிலைய அதிகாரிக்கு தகவல் கொடுத்தது கண்டறியப்பட்டுள்ளது.

விபத்து நடைபெற்ற பிறகு, ரயில் நிலைய அதிகாரியை தொடர்புகொண்ட கேட் கீப்பர், கேட்டை மூடவில்லை என்பதை ஒப்புக் கொண்டுள்ளார் என்பது இருவருக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல் மூலம் தெரிய வந்துள்ளது.

ரயில்வேதுறையின் தானியங்கி தொலைபேசி உரையாடல் பதிவை போலீசார் சேகரித்துள்ளனர். விசாரணையில் கிடைத்துள்ள தகவல் மூலம் விபத்துக்கு கேட் கீப்பரின் அலட்சியமே காரணம் என்பது உறுதியாகியுள்ளது.

## 'கலைஞர் கனவு இல்லம்' திட்டம்!

# 1 லட்சம் வீடுகள் இலக்கு விரைவில் நிறைவேறும்!

சென்னை, ஜூலை 13 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால், 2024-25 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கலைஞர் கனவு இல்லம் திட்டம், ஆண்டுதோறும் ஒரு லட்சம் வீடுகளைக் கட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த திட்டத்தில் நடப்பு ஆண்டில், ஆயிரத்து 673 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளுக்கு அடித்தள கட்டடம் நிறைவு பெற்றுள்ளன.

இந்நிலையில், ஏழைகளுக்கான கிராமப்புற வீட்டு வசதிக்கான திராவிட மாடல் அரசின் முதன்மைத் திட்டமான கலைஞர் கனவு இல்லம், சில வாரங்களில் ஒரு லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட உள்ளது. அதன்படி, திராவிட மாடல் ஆட்சியில் கலைஞர் கனவு இல்லம் திட்டம் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய நிலவரப்படி, 81 ஆயிரத்து 811 கலைஞர் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வீட்டின் குறைந்தபட்ச அடித்தளப் பரப்பளவு சமையலறை உட்பட 360 சதுர அடி ஆகும். தகுதியுள்ள நிலமற்ற நபர்களுக்கு தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் பட்டா வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கினங்க விழுப்புரம் மத்திய மாவட்டம், கண்டமங்கலம் வடக்கு ஒன்றியம், பெரியபாபுசமுத்திரம் ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆலய மங்கள படைப்பு மற்றும் ஏ.எல்.சி. மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மையத்தை சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் கலந்து கொண்டு திறந்து வைத்தார்கள். உடன் சிறுபான்மையினர் மற்றும் கிறிஸ்துவ கூட்டமைப்பின் மாநில செயலாளர் விஜிலா சத்யானந்த், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், ஆற்காடு லூத்திரன் திருச்சபை பேராயர் பீட்டர் பால் தாமஸ், கண்டமங்கலம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.எஸ்.வாசன், ஒன்றிய கழக செயலாளர்கள் வே.கணேசன், சீனு.செல்வரங்கம், இரா.மைதிலி ராஜேந்திரன், கிளியனூர் கே.எஸ். ராஜி, திருவக்கரை பாஸ்கர், கு.செல்வமணி, பொதுக்குழு உறுப்பினர் டி.என்.ஜெ.சம்பத், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மாரிமுத்து, புகழேந்தி, ஒன்றிய கவுன்சிலர் சரவணன், ஊராட்சி மன்ற தலைவர் ரஞ்சிதம் பாலகிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. விவசாய அணி

# தஞ்சை மாநகர அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் நியமனம்

**விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு**

**கழகத்தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாய அணியின் தஞ்சை மத்திய மாவட்டம் -தஞ்சை மாநகரஅமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**தஞ்சை மத்திய மாவட்டம்**

**தஞ்சை மாநகரம்**

அமைப்பாளர் - க. வினோத் மேலராஜவீதி, தஞ்சாவூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) நா. அமிர்தராஜ் சுபேதார் தெரு, எம். சாவடி, தஞ்சாவூர். 2) ரா. வசந்த் வெட்டுக்காரத் தெரு, தஞ்சாவூர். 3) மு. கதிரேசன் கவர்காரத் தெரு, கீழவாசல், தஞ்சாவூர். 4) பா. சுந்தர் முல்லை நகர், மானோஜிப்பட்டி சாலை, தஞ்சாவூர். 5) பி. ஜெயபிரகாஷ் பெரிய தெரு, சுங்காந்திடல், கரந்தை, தஞ்சாவூர்.

**"அண்ணாஅறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 11-07-2025

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் தேவனூரில் ரூ. 2. 35 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட உண்டு உறைவிடப் பள்ளியை சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை அடுத்து தேவனூரில் நடைபெற்ற அரசு விழா நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பள்ளி குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், மாவட்ட கல்வி அலுவலர்கள் சிவசுப்பிரமணியன், அருள், ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன் உள்ளனர்.